Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, ஏப்ரல் 04, 2023

## SLIM-KANTAR மக்கள் விருதுகள் 2023 இல் *Nescafé* மற்றும் *Maggi* மீதான அபிமானம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது

SLIM-KANTAR மக்கள் விருதுகள் 2023 நிகழ்வில், அனைத்து இல்லங்களிலும் அபிமானம் பெற்ற நெஸ்லே மூன்று விருதுகளை வென்றுள்ளது. Nescafé மற்றும் Maggi ஆகியவை, இரண்டாவது ஆண்டாகவும், முறையே ஆண்டின் சிறந்த மக்கள் தெரிவு சூடான பான வகை வர்த்தகநாமமாகவும், ஆண்டின் சிறந்த மக்கள் தெரிவு நொறுக்குத்தீனி வர்த்தகநாமத்தின் கூட்டு வெற்றியாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதே நேரத்தில், Maggi ஆனது ஆண்டின் சிறந்த மக்கள் தெரிவு சமையல் சுவையூட்டிப் பொருள் வர்த்தகநாமத்திற்கான கூட்டு வெற்றியாளராகவும் முடிசூட்டப்பட்டது. இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தினால் (Sri Lanka Institute of Marketing - SLIM) தொடர்ச்சியாக 17 வது ஆண்டாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட, SLIM-KANTAR மக்கள் விருதுகள், இலங்கை மக்களின் இதயங்களில் வீற்றிருக்கின்ற வர்த்தகநாமங்கள் மற்றும் ஆளுமைகளுக்கு வெகுமதி அளிப்பதுடன், நாட்டின் மிகவும் மதிப்புமிக்க விருது நிகழ்வுகளில் ஒன்றாகவும் கருதப்படுகிறது.

தனித்துவமான நறுமணம் மற்றும் செழுமைமிக்க சுவைக்காக இலங்கை மக்களின் அபிமானத்தை வென்ற, Nescafé ஆனது 100% தூய கோப்பி விதைகளின் நலச்செழுமையுடன் தயாரிக்கப்படுவதுடன், நாள் முழுவதும் நுகர்வோரை உற்சாகப்படுத்தவும், புத்துணர்வூட்டவும் செய்கிறது. சிறந்த மூலப்பொருட்களைப் பயன்படுத்தி இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற Maggi, நூடில்ஸ் முதல் தேங்காய் பால் மா மற்றும் சுவையூட்டிப் பொருட்கள் வரையிலான பரந்த அளவிலான தயாரிப்புகளைக் கொண்டு, 30 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையின் குடும்பங்கள் மத்தியில் மிகவும் அபிமானம் பெற்றதாக இருந்து வருகிறது. இது நுகர்வோரின் சமையலில் தனித்துவமான வேறுபாட்டுக்கு உதவுகிறது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. பேர்ன்ஹார்ட் ஸ்டெ∴பான் அவர்கள் தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கையில், "தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக மக்கள் விருதுகளை வென்றமை, இலங்கை நுகர்வோருடன் எங்களின் வர்த்தகநாமங்களின் எதிரொலிப்பிற்கு உண்மையான சான்றாகும். சவாலான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், தமது வாடிக்கையாளர்களை மகிழ்விப்பதில் *Nescafé* மற்றும் *Maggi* ஆகியவற்றின் பின்னால் உள்ள அணிகளின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் சான்று இதுவாகும். இந்த அங்கீகாரங்கள் உண்மையிலேயே எம்மைப் பணிவடையச் செய்கின்றன. நாங்கள் தொடர்ந்து உயர்தர தயாரிப்புகளை வழங்குவோம், மற்றும் 115 ஆண்டுகளுக்கும் மேலாக நாங்கள் ஆற்றியுள்ளதைப் போல எப்போதும் எங்கள் நுகர்வோருக்கு முதலிடம் கொடுப்போம். அவர்களின் அபிமானம், நம்பிக்கை மற்றும் விசுவாசம் ஆகியவை எங்களின் வெற்றிக்குப் பின்னால் ஒரு குறிப்பிடத்தக்க உந்து சக்தியாக உள்ளன," என்று குறிப்பிட்டார்.

'தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகள் என அனைவரதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருதல்' என்ற அதன் நோக்கத்தால் உந்தப்பட்டு, நெஸ்லே நிறுவனம் இலங்கையில் தலைமுறை தலைமுறையாக இளமை முதல் முதுமை வரை உயர்தர உணவு மற்றும் பான வகைகள் மூலம் ஊட்டமளித்துள்ளது. 1906 ஆம் ஆண்டு இலங்கையில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து, இன்று, நெஸ்லே இலங்கை மக்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறியுள்ளது. 24,000 க்கும் மேற்பட்ட இலங்கை பால் உற்பத்தி மற்றும் தென்னை விவசாயிகள் மற்றும் வீடுகளில் தென்னை வளர்ப்பவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்திற்கு பங்களித்து வருவதுடன், 800 க்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளது. கடுமையான பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தி, குருநாகலிலுள்ள தனது அதிநவீன தொழிற்சாலையில், இலங்கையில் விற்பனை செய்யப்படும் 90% க்கும் அதிகமான தயாரிப்புகளை உற்பத்தி செய்கிறது.

---


**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |
| நிறுவன தொடர்பாடல்கள் | இசுரி அழகக்கோன் | +94760395781 | Isuri.Alahakoon@lk.nestle.com |